## திருநெல்வேலி மாநகராட்சி

### 2020ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

**1)** திருநெல்வேலி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட 45 பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை நிலையான மாமன்ற உட்கட்டமைப்பு நிதியுதவிடன் தமிழ்நாடு நிலை –II-பகுதி–1 KfW (SMIF- TN-II -1) திட்டத்தின் கீழ் மேம்படுத்தும் வகைக்கு ஏற்கனவே மாமன்றத் தீர்மானம் எண் 153, நாள் 30.11.2015–ல் அனுமதி பெறப்பட்டதின்படி, நகராட்சி நிர்வாக ஆணையாளருக்கு ரூ.29.765 கோடி மதிப்பீட்டில் பிரேரணை அனுப்பப்பட்டது. தற்போது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் (TNUDF) கடிதம் எண் TNUDF/Projects/Tirunelveli Parks, நாள் 24.06.2016–ன் மூலம், இத்திட்டத்திற்கு மேற்குறிப்பிட்ட SMIF-TN-II-1 நிதியுதவியுடன் KfW திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட விபரப்படியான நிதி பங்கீட்டில் மொத்தம் ரூ.29.76 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | நிதி நிறுவனங்களின் விபரம் | தொகை (ரூ. கோடியில்) | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் (TNUDF) KfW Assisted (SMIF-TN-II-1) திட்டத்தின் கீழான கடன் | 11.90 | 40% |
| 2 | KfW Assisted (SMIF-TN-II-1) திட்டத்தின் கீழ் திட்ட நிலையான மானிய நிதி (Project Sustainability Grant Fund – (PSGF) – மானியம் | 14.88 | 50% |
| 3 | திருநெல்வேலி மாநகராட்சி பங்குத் தொகை | 2.98 | 10% |
| | மொத்தம் | **29.76** | **100%** |

மேற்படி திட்டப்பணிக்கு, பட்டியலில் கண்ட விபரப்படியான நிதி பங்கீட்டின்படி, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தால் (TNUDF) கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட KfW Assisted (SMIF-TN-II-1) திட்டத்தின் கீழ் திட்ட நிலையான மானிய நிதி (Project Sustainability Grant Fund – (PSGF) – மானியத் தொகை ரூ.14.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்டப்பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியத் தொகையில் ரூ.13.39கோடி மட்டுமே வரப்பெற்றுள்ளது. மீதமுள்ள மானியம் ரூ.1.49 கோடியினை விடுவிக்கும் காலம் Grant Sanction Letter நாள்.26.4.2017–ல் நிபந்தனைப்படி 2 ஆண்டுகள் 05.07.2019 உடன் முடிவடைந்துவிட்டது. எனவே, மானியம் விடுவிக்கும் காலத்தினை அக்டோபர்–2020 வரை நீட்டிப்பு செய்வதற்கு தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தை கேட்டுக் கொள்வதற்கு மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, திருநெல்வேலி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட 45 பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை நிலையான மாமன்ற உட்கட்டமைப்பு நிதியுதவிடன் தமிழ்நாடு நிலை–II–பகுதி–1 KfW (SMIF- TN-II -1) திட்டத்தின் கீழ் மேம்படுத்தும் வகைக்கு ஏற்கனவே மாமன்றத் தீர்மானம் எண் 153, நாள் 30.11.2015–ல் அனுமதி பெறப்பட்டதின்படி, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் (TNUDF) கடிதம் எண் TNUDF/Projects/ Tirunelveli Parks, நாள் 24.06.2016–ன் மூலம், இத்திட்டத்திற்கு மேற்குறிப்பிட்ட SMIF-TN-II-1 நிதியுதவியுடன் KfW திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு KfW Assisted (SMIF-TN-II-1) திட்டத்தின் கீழ் திட்ட நிலையான மானிய நிதி (Project Sustainability Grant Fund – (PSGF)– மானியத் தொகை ரூ.14.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் ரூ.13.39கோடி மட்டுமே வரப்பெற்றுள்ளது. மீதமுள்ள மானியம் ரூ.1.49 கோடியினை விடுவிக்கும் காலம் Grant Sanction Letter நாள்.26.4.2017–ல் நிபந்தனைப்படி 2 ஆண்டுகள் 05.07.2019 உடன் முடிவடைந்துவிட்டது.

எனவே, மானியம் விடுவிக்கும் காலத்தினை அக்டோபர்–2020 வரை நீட்டிப்பு செய்வதற்கு தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தை கேட்டுக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 123

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(பி3/5896/2017)

---

2) திருநெல்வேலி மாநகராட்சிக்கு அரியநாயகிபுரம் அணைக்கட்டில் இருந்து 50 MLD குடிநீர் பெறுவதற்கு ரூ.230.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் வளர்ச்சி நிதியத்தின் கீழ்க்கண்டுள்ள விபரப்படி கடன் மற்றும் மான்ய நிதியுதவியுடன் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு திட்ட மேலாண்மை ஆலோசகராக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு மேற்படி வாரியம் மூலம் 13.10.2016ல் வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி திட்டத்திற்கான நிதி ஆதாரம் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | விபரம் | தொகை ரூ.கோடியில் | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | ஜெர்மன் வங்கி கடன் | 69.00 | 30% |
| 2 | ஜெர்மன் வங்கி மான்யம் | 46.00 | 20% |
| 3 | உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி | 92.00 | 40% |
| 4 | உள்ளாட்சி பங்களிப்பு | 23.00 | 10% |
| | மொத்தம் | **230.00** | **100%** |

மேற்படி திட்டப்பணிக்கு, பட்டியலில் கண்ட விபரப்படியான நிதி பங்கீட்டின்படி, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தால் (TNUDF) கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட ஜெர்மன் வங்கி கடன் தொகை ரூ.69.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிக்கான கடன் தொகை பெறுவதற்கு ஒப்பந்தம் ஜுன்–2019 ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடன் தொகையில் ரூ.46.50 கோடி மட்டுமே வரப்பெற்றுள்ளது. எனவே, மீதமுள்ள தொகை ரூ.22.50 கோடியினை விடுவிக்க ஜெர்மன் வங்கி கடன் திட்டத்தின் கீழ் திட்ட நிலையான கடன் தொகைக்கு ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தம் 31/12/2019 உடன் முடிவடைவதால் மேற்படி ஒப்பந்தத்தினை 01.01.2020 முதல் 31.12.2021 வரை நீட்டிப்பு செய்வதற்கு தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தை கேட்டுக் கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, திருநெல்வேலி மாநகராட்சிக்கு அரியநாயகிபுரம் அணைக்கட்டில் இருந்து 50 MLD குடிநீர் பெறுவதற்கு ரூ.230.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் வளர்ச்சி நிதியத்தின் கீழ்க்கண்டுள்ள விபரப்படி கடன் மற்றும் மான்ய நிதியுதவியுடன் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு திட்ட மேலாண்மை ஆலோசகராக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு மேற்படி வாரியம் மூலம் 13.10.2016ல் வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி திட்டப்பணிக்கு, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி பங்கீட்டின்படி, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தால் (TNUDF) கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட ஜெர்மன் வங்கி கடன் தொகை ரூ.69.00 கோடி

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிக்கான கடன் தொகை பெறுவதற்கு ஒப்பந்தம் ஜூன்–2019–ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடன் தொகையில் ரூ.46.50 கோடி மட்டுமே வரப்பெற்றுள்ளது. எனவே, மீதமுள்ள தொகை ரூ.22.50 கோடியினை விடுவிக்க ஜெர்மன் வங்கி கடன் திட்டத்தின் கீழ் திட்ட நிலையான கடன் தொகைக்கு ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தம் 31/12/2019 உடன் முடிவடைவதால் மேற்படி ஒப்பந்தத்தினை 01.01.2020 முதல் 31.12.2021 வரை நீட்டிப்பு செய்வதற்கு தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தை கேட்டுக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 124

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(பி3/4988/2017)

---